**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.204/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : முனியசாமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : காளிமுத்து | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.02.2026

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தற்போது இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.10.2023 ம் தேதி 16.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி தலைமையில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக ஒருவானேந்தல், தேவர்குறிச்சி, பொதிக்குளம் ஆகிய பகுதிகளில் கண்காணித்து வந்தபோது பொதிக்குளத்தில் நாங்கள் சென்றபோது அந்த கிராமத்தை சேர்ந்த அருணாச்சலம் மகன் வீரபத்திரன் என்பவர் தனது பெட்டிக்கடை முன்புறம் வெள்ளைநிற சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸாராகிய எங்களை கண்டதும் அந்த சாக்குபையை மறைக்க முயன்றவரை சுற்றிவளைத்து பிடித்து அந்த பையை சோதனை செய்தபோது அதில் சுமார் 180ML அளவுள்ள Old Chef Brandy என்ற டாஸ்மாக் லேபிள் உள்ள மதுவுடன் கூடிய 5 பாட்டில்களை வைத்திருந்தார்.

அதுபற்றி விசாரித்தபோது எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் மதுபானக்கடையில் வாங்கி சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அதனால் சார்பு ஆய்வாளர் அவர்கள் அவரை கைது செய்து உறவினர்களுக்கு தெரியப்படுத்தி அவர் வைத்திருந்த மதுபாட்டில்களை 16.15 மணிக்கு அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்

முன்னிலையிலும் முதல்நிலைக்காவலர் திரு.மணிகண்டன் முன்னிலையிலும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், மணிகண்டனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை 16.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற எண்.80/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மதுபாட்டில்களை தான் எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த புகைப்படம் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் தகவல் தெரிந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வெள்ளை சாக்குபையை வைத்திருந்ததாக சொல்லப்படுகிற நிலையில் அதை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிரியானவர் அவரது பெட்டிக்கடைக்கு தேவையான பொருட்களை தான் சாக்குபையில் வைத்திருந்தார் என்றாலும், நான் கூறியபடி மதுபாட்டில்கள் இருந்திருந்தால் அவைகளை கைப்பற்றும்போது குறைந்தபட்சம் செல்போனிலாவது நாங்கள் வீடியோ பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், இவ்வழக்கை பொறுத்த வரை வீடியோ பதிவு எதுவும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் மதுபாட்டில்களை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்ய முடிந்த சார்பு ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் கூறிய படி எதிரி

மதுபானங்களை வைத்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துகொடுத்து தற்போது அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.204/2025
Prosecution witness.02

பெயர் : மணிகண்டன் தொழில் :

தந்தை/கணவர் பெயர் : பாண்டி கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.02.2026

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தற்போது இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.10.2024ம் தேதி 16.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி தலைமையில் நானும், அசா.1ம் மதுவிலக்கு சம்மந்தமாக ஒருவானேந்தல், தேவர்குறிச்சி, பொதிக்குளம் ஆகிய பகுதிகளில் கண்காணித்து வந்தபோது பொதிக்குளத்தில் நாங்கள் சென்றபோது அந்த கிராமத்தை சேர்ந்த அருணாச்சலம் மகன் வீரபத்திரன் என்பவர் தனது பெட்டிக்கடை முன்புறம் வெள்ளைநிற சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸாராகிய எங்களை கண்டதும் அந்த சாக்குபையை மறைக்க முயன்றவரை சுற்றிவளைத்து பிடித்து அந்த பையை சோதனை செய்தபோது அதில் சுமார் 180ML அளவுள்ள Old Chef Brandy என்ற டாஸ்மாக் லேபிள் உள்ள மதுவுடன் கூடிய 5 பாட்டில்களை வைத்திருந்தார்.

அதுபற்றி விசாரித்தபோது அவர் மதுபானக்கடையில் இருந்து அவரது தேவைக்காக வாங்கி வைத்திருப்பதாக கூறினார். அதனால் சார்பு ஆய்வாளர் அவர்கள் அவரை கைது செய்து உறவினர்களுக்கு தெரியப்படுத்தி அவர் வைத்திருந்த மதுபாட்டில்களை 16.15 மணிக்கு அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும் அசா.1 முன்னிலையிலும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், அசா.1ம் சாட்சிகளாக

கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை 16.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற எண்.80/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள மதுபாட்டில்களை தான் எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் தகவல் தெரிந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வெள்ளை சாக்குபையை வைத்திருந்ததாக சொல்லப்படுகிற நிலையில் அதை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிரியானவர் அவரது பெட்டிக்கடைக்கு தேவையான பொருட்களை தான் சாக்குபையில் வைத்திருந்தார் என்றாலும், நான் கூறியபடி மதுபாட்டில்கள் இருந்திருந்தால் அவைகளை கைப்பற்றும்போது குறைந்தபட்சம் செல்போனிலாவது நாங்கள் வீடியோ பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், இவ்வழக்கை பொறுத்த வரை வீடியோ பதிவு எதுவும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் மதுபாட்டில்களை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்ய முடிந்த சார்பு ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் கூறிய படி எதிரி மதுபானங்களை வைத்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில்

கையொப்பம் செய்துகொடுத்து தற்போது அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.